www.agaram.lk

04

முதலாம் தவணைப் பரீட்சை - 2018
கத்தோலிக்க திருமறை (R.C)

தரம் : 6 நேரம் : 1.30 மணி

## பகுதி I

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. உலகிலேயே அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல் எது?
   1. திருவிவிலியம் 2. திருக்குறள் 3. திருக்குர்ஆன் 4. திரிபிடகம்

2. திருவிவிலியத்தில் உள்ள நூல்களின் எண்ணிக்கை
   1. 46 2. 73 3. 27 4. 70

3. கிறிஸ்தவர்கள் அனைவரது வீடுகளிலும் இருக்க வேண்டியது
   1. தொலைக்காட்சிப் பெட்டி 2. கணனி
   3. நற்கருணை 4. திருவிவிலியம்

4. ஐந்நூல் என்பதன் வேறு பெயர் அல்லாதது
   1. தோரா 2. சட்டம் 3. தொடக்கநூல் 4. பஞ்சாகமம்

   a) கடவுள் உலகையும் மனிதனையும் படைத்தல்
   b) பார்வோன் மன்னன் இஸ்ரயேல் மக்களைத் துன்புறுத்தல்
   c) சீனாய் மலையில் பத்துக் கட்டளைகளைக் கொடுத்தல்
   d) காயீன், ஆபேல் கதை

5. மேலுள்ள கூற்றுக்களில் தொடக்கநூலில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள்
   1. a, b 2. b, c 3. a, d 4. c, d

6. மேலுள்ளவற்றுள் விடுதலைப்பயணத்துடன் தொடர்புடையவை
   1. b, c 2. a, c 3. b, d 4. a, b

7. ஐந்நூல்களுள் உள்ளடங்காத நூல்
   1. தொடக்கநூல் 2. விடுதலைப் பயணம்
   3. இணைச்சட்டம் 4. திருப்பாடல் நூல்

8. இயேசுவைப் பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள நற்செய்தி நூல்
   1. மத்தேயு 2. மாற்கு
   3. லூக்கா 4. மேற்கூறிய யாவும்

9. மாற்கு நற்செய்தியின் அடையாளம்
   1. சிங்கம் 2. கழுகு 3. எருது 4. மனிதன்

10. 'நற்செய்தியாளர் யோவானின் சகோதரர் ………… ஆவார்'. இடைவெளிக்குப் பொருத்தமானது
    1. மத்தேயு 2. பேதுரு
    3. பெரிய யாக்கோபு 4. அந்திரேயா

11. இறைவன் இவ் அழகிய, வியப்பிற்குரிய படைப்பை எமக்குத் தந்தது
    1. எம்மேல் கொண்ட இரக்கத்தினால்
    2. எம்மீது கொண்ட கோபத்தினால்
    3. எம்மீது கொண்ட நம்பிக்கையினால்
    4. எம்மீது கொண்ட அளவில்லா அன்பினால்

Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

Agaram.lk - Keep your dreams alive!

Agaram.lk - Keep your dreams alive!

12. கடவுள் மனிதனைப் படைத்தது
    1. $1^{ம்}$ நாளில்
    2. $6^{ம்}$ நாளில்
    3. $7^{ம்}$ நாளில்
    4. $5^{ம்}$ நாளில்

13. கடவுள் மனிதனிடம் ஒப்படைத்த கடமை அல்லாதது
    1. காடுகளை அழித்தல்
    2. பிள்ளைப்பேறு
    3. மண்ணுலகில் பலுகிப் பெருகுதல்
    4. நிலத்தில் பயிர் செய்தல்

14. கடவுள் ஆதாமையும் ஏவாளையும் குடியிருக்கச் செய்த தோட்டத்தின் பெயர்
    1. கானான்
    2. சீனாய் மலை
    3. பெத்லகேம்
    4. ஏதேன்

15. கடவுளின் படைப்பைப் பாதுகாக்க செய்ய வேண்டியது
    1. சூழலை சுத்தமாக வைத்திருத்தல்
    2. பொலித்தீன் பாவனையை இல்லாதொழித்தல்
    3. காடுகளைப் பேணுதல்
    4. மேற்கூறிய யாவும்

16. கடவுளின் படைப்புக்களில் மேன்மையான படைப்பு
    1. ஒளி
    2. மரம், செடி, கொடிகள்
    3. மனிதன்
    4. விலங்குகள்

17. "ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் ........................ ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்" இடைவெளிக்குப் பொருத்தமானது
    1. காற்றை
    2. ஒட்சிசனை
    3. உயிர்மூச்சை
    4. தனது ஆவியை

    a) இறை உருவையும் சாயலும்
    b) மனிதப் படைப்பு "மிகவும்" நல்லதெனக் கண்டார்
    c) திறமைகள் பலவிதமானவை

18. மேற்கூறியவற்றுள் மனிதன் மற்ற எல்லாப் படைப்புக்களையும் விட உயர்வடைவதற்கான காரணமாக அமையாதது
    1. a
    2. b
    3. c
    4. எதுவுமில்லை

19. இயேசுவுக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது
    1. $40^{ம்}$ நாளில்
    2. $8^{ம்}$ நாளில்
    3. $21^{ம்}$ நாளில்
    4. $31^{ம்}$ நாளில்

20. திருக்குடும்பம் யூத மத, இன. சம்பிரதாயச் சடங்குகளை
    1. எதிர்த்தனர்
    2. நிறைவேற்றினர்
    3. இல்லாதொழித்தனர்
    4. வாதிட்டனர்

(2 × 20 = 40 புள்ளிகள்)

agaram.lk

www.agaram.lk

## பகுதி II

முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. அ. முதலாம் தவணையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு யாது?
   ஆ. அக்கணிப்பீட்டிற்காக பயன்படுத்திய தர உள்ளீடுகள் நான்கைப் பெயரிடுக.
   இ. கணிப்பீட்டிற்காக ஆசிரியரால் வழங்கப்பட்ட அறிவுரைகள் இரண்டு எழுதுக.
   ஈ. இக்கணிப்பீட்டினால் நீர் அடைந்த நன்மைகள் நான்கு தருக.

(4 x 4 = 16 புள்ளிகள்)

2. அ. நற்செய்தி நூல்கள் மூன்றைப் பெயரிடுக.
   ஆ. அவற்றின் அடையாளங்களைக் குறிப்பிடுக.
   இ. நற்செய்தி நூல்களை வாசிப்பதனால் உமக்குக் கிடைக்கும் செய்திகள் 4 தருக.

(3 + 3 + 5 = 11 புள்ளிகள்)

3. அ. திருவிவிலியத்தின் பெரும் பிரிவுகளைக் குறிப்பிடுக.
   ஆ. பழைய ஏற்பாட்டிலிருந்து 3 நூல்களின் பெயர்களை எழுதுக.
   இ. திருவிவிலியத்தை மரியாதையாக ஏற்றி வைக்க நீர் செய்யவேண்டியவை 4 குறிப்பிடுக.

(3 + 3 + 5 = 11 புள்ளிகள்)

4. அ. மரியாவுக்கு மங்கள வார்த்தை கூறிய தூதரின் பெயரைக் குறிப்பிடுக.
   ஆ. யூத இனத்தவரின் மறை, இசை சம்பிரதாயச் சடங்குகள் 2 தருக.
   இ. உமது வகுப்பில் நல்லுறவை, ஒற்றுமையை வளர்ப்பதற்கு நீர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூன்றை எழுதுக.

(3 + 3 + 5 = 11 புள்ளிகள்)

5. அ. கடவுள் மனிதனை எத்தனையாவது நாளில் படைத்தார்?
   ஆ எம்மால் பாதுகாக்கப்பட வேண்டிய படைப்புக்கள் 4 தருக.
   இ. கடவுளின் படைப்பைப் பாதுகாக்கக் கூடிய வழிமுறைகள் 4 தருக.

6. அ. ஐந்நூல்களும் எவை?
   ஆ. விடுதலைப்பயண நூலில் உள்ள விடயங்கள் 2 எழுதுக.
   இ. இறைவார்த்தையூடாக எம்மோடு பேசும் இறைவனுக்கு நன்றி கூறிச் செபம் ஒன்று ஆக்குக.

(3 + 3 + 5 = 11 புள்ளிகள்)

Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk
Agaram.lk - Keep your dreams alive!
Agaram.lk - Keep your dreams alive!
agaram.lk